மாநில தடகள போட்டியில் வென்ற மாணவர்களுக்கு சான்றிதழ்

பல்லடம், பிப்.8: பல்லடம் அருகேயுள்ள அருள்புரம் ஜெயந்தி ஸ்போர்ட்ஸ் சென்டரில் முதலாம் ஆண்டு மாநில அளவிலான தடகள போட்டி நடைபெற்றது.

ஜெயந்தி கல்வி நிறுவனங்களின் தலைவர் கிருஷ்ணன் தலைமை வகித்தார். இந்த நிகழ்வில் பல்லடம் டிஎஸ்பி விஜயகுமார், இன்ஸ்பெக்டர் லெனின் அப்பாதுரை, பின்னலாடை நிறுவன உரிமையாளர் சுனில்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 300 வீரர்கள் ஓட்டப்பந்தயம், குண்டு எறிதல், தொடர் ஓட்டம் உள்ளிட்ட பல்வேறு தடகள போட்டிகளில் பங்கேற்றனர். திருப்பூர் கிட்ஸ் கிளப் பள்ளி ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் கோப்பை, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் பள்ளி முதல்வர்கள் விஜயராஜன், மலர்விழி, ஜெயந்தி பள்ளியின் உடற்கல்வி இயக்குனர்கள் ஆனந்தன், வினோத், அருள், ஸ்ரீதர், சரத், கௌரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கே 1622 அனுப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், லிமிடெட்

1/140, அனுப்பட்டி (அஞ்சல்), பல்லடம் (வட்டம்), திருப்பூர் மாவட்டம் 641664

மகாசபை கூட்ட அறிவிப்பு

அன்புடையீர்,

நமது சங்கத்தில் கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவெடுக்கும் பொருட்டு 16.02.2024ந் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நமது சங்க அலுவலக வளாகத்தில் மகாசபை கூட்டம் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து "அ" வகுப்பு உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பொருட்கள் :

1. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் குறிப்பாணை மே.கு.47420 /2022/நொவேசா. நாள். 19.01.2024 வழி தொடர்புறுத்தப்பட்ட அரசாணை (நிலை) எண்.1 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சி.என்.1) துறை. நாள். 02.01.2024 ல் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு துணைவிதி திருத்தம் மேற்கொள்ளுதல்.
2. 2024-25 ஆம் ஆண்டிற்கு உத்தேச வரவு செலவு திட்டம் தயாரித்தல்.
3. தகுதியான இணை உறுப்பினர்களை "அ" வகுப்பு உறுப்பினர்களாக அங்கீகரித்தல்
4. இறந்த "அ" வகுப்பு உறுப்பினர்களை நீக்குதல்
5. 2020-21, 2021-22 மற்றும் 2022 -23 ஆகிய தணிக்கை ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கையினை வாசித்து அங்கீகரித்தல்
6. செயலாட்சியரால் கொண்டு வரப்படும் இதர விசயங்கள்

திரு.ஹைத.நிஷார்
செயலாட்சியர்

நாள் : 06.02.2024
இடம் : அனுப்பட்டி

R.வசந்தாமணி
செயலாளர்

ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

11வது தளம், வடக்குப் பக்கம், ஆர்–டெக் பார்க், மேற்கு விரைவு நெடுஞ்சாலை, கோரிகான் (கிழக்கு), மும்பை–400063.

சுவாதீன அறிவிப்பு [காண்க விதி 8(1)]

இவ்வாறிருக்க, ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிட். ஆனது 31.08.2017 மற்றும் 22.06.2023 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தப் பத்திரம் மூலம் மூல கடனீந்தோர் DBS (முன்னதாக லக்ஷ்மி விலாஸ் பேங்க்) வசமிருந்து நிதிச் சொத்துகளைக் கைப்பற்றியுள்ளது. ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரி பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறை கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை [அமலாக்கம்] விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(2) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, 25.08.2023 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு வழங்கி, கடன்தாரர்கள் 1. M/s. ஸ்ரீ வெங்கடேஸ்வரா மோட்டார்ஸ், பிரதிநிதித்துவப்படுத்தும் அதன் உரிமையாளர் திரு.[illegible], கதவு பழைய எண்.9, புதிய எண்.11/2A, திருமுருகன் நகர், மருதமலை பிரதான சாலை, வடவள்ளி, கோயம்புத்தூர்–641 041, **2. திருமதி.தமிழ்செல்வி,** க/பெ. P.[illegible], பழைய எண்.9, புதிய எண்.11/2A, திருமுருகன் நகர், மருதமலை பிரதான சாலை, வடவள்ளி, கோயம்புத்தூர்–641 041, **3. திருமதி.S.புஷ்பராணி,** க/பெ. சண்முகம், 37/A, 6/19, [illegible] காலனி, [illegible], தொண்டாமுத்தூர் சாலை, கோயம்புத்தூர்–641 041 ஆகியோர், கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்ட 24.08.2023 தேதிய நிலுவை ரூ.10,54,38,333.11/– (ரூபாய் பத்து கோடியே ஐம்பத்து நான்கு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று மற்றும் பைசா பதினொன்று மட்டும்) மொத்தத் தொகையை முழுப் பணம்செலுத்தப்பட்ட தேதி வரை அதற்கான எதிர்கால வட்டியுடன் சேர்த்து, மேற்கூறிய கோரிக்கை அறிவிப்புத் தேதியிலிருந்து அறுபது (60) நாட்கள் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் நிலுவைத்தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளார். இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8 உடன் சட்டத்தின் பிரிவு 13 இன் பிரிவு (4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை இந்த 5ஆம் தேதி பிப்ரவரி 2024 நாளில் கையக சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர்கள் / உப–கடன்தாரர்கள் ஆகியோருக்கு குறிப்பிட்டும் மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது: அட்டவணைச் சொத்துகளுடன் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் மேலும் மேற்கூறியச் சொத்துகள் உடனான அனைத்து நடவடிக்கைகளும் 31.01.2024 தேதியன்று நிலுவை ரூ. ரூ.11,47,51,330.21/– (ரூபாய் பதினொரு கோடியே நாற்பத்தேழு இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து முந்நூற்று முப்பது மற்றும் பைசா இருபத்து ஒன்று மட்டும்) தொகைக்காக, அதற்கான எதிர்கால வட்டி மற்றும் செலவுடன் சேர்த்து ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் வசூலுக்கு உட்படும்.

கடனீட்டுச் சொத்துகளின் விவரங்கள்

1) கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், தொண்டாமுத்தூர் துணை பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வட்டம், பேட்டை கிராமம், குடியிருப்பு மனை SF No.437/2 இல் உள்ள 2.40 ஏக்கர்கள் நிலத்தின் தெற்கு பகுதி கீழ்வரும் எல்லைகளை உடையது. எல்லைகள்: வடக்கில்: வாய்க்கால், தெற்கில்: S.F.No.437/1இல் உள்ள நிலம், கிழக்கு: S.F.No.438 இல் உள்ள நிலம், மேற்கில்: S.F.No.437இல் உள்ள [illegible] சொந்தமான 2.25 ஏக்கர் நத்தம் புறம்போக்கு நிலம். இதில் 1.18 ஏக்கர் நிலப்பரப்பின் தென்மேற்கு மூலையில் 0.11 ஏக்கர் நிலப்பரப்பு மற்றும் 4787ச.அடி பரப்பளவு உள்ள நிலம் பின்வரும் எல்லைகளுக்குள் உள்ளது. வடக்கில்: கிழக்கு மேற்கு வாய்க்கால், தெற்கே: 23 அடி கிழக்கு மேற்கு பொதுவான பாதை, கிழக்கில்: SF எண்.438 இல் உள்ள 25 அடி பொது வழி செல்லும் பாதை, மேற்கில்: S.F.No.437/2 இல் உள்ள திரு.[illegible] சொந்தமான நிலங்கள். அளவீடு: கிழக்கு மேற்காக– வடக்கில்: 57 அடி, தெற்கில்: 57 ½அடி, வடக்கு தெற்காக மேற்கில்– 81 ½, வடக்கு தெற்காக கிழக்கில்–74 ½, 4787 சதுர அடி அல்லது 10 சென்ட் 431 ச.அடி நிலம் அனைத்து பொதுவான உரிமைகளுடன் (12.09.2014 தேதியிட்ட விற்பனை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி) கூடிய திரு. P [illegible] சொந்தமான சொத்து பேட்டை பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது.

2. கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி துணைப் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், வடவள்ளி கிராமம், S.F.No.523, இல் உள்ள நிலங்கள் வீட்டு மனைகளாக உருவாக்கப்பட்டுள்ளன. அதில் மனை எண்.12 பின்வரும் எல்லைகளில் அமைந்துள்ளது. தெற்கில்: திரு. [illegible] மற்றும் திருமதி. [illegible] சொந்தமான சொத்து, கிழக்கில்: மனை எண்.11 மற்றும் திரு.[illegible] மற்றும் திரு.[illegible] ஆகியோரின் வீடு, மேற்கில்: மனை எண்.13 மற்றும் திரு.[illegible] சொந்தமான காலி நிலம், வடக்கில்: 20 அடி கிழக்கு மேற்கு சாலை. அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கில்: – 25அடி, கிழக்கு மேற்காக தெற்கில் –25அடி, வடக்கு தெற்காக கிழக்கில் –55அடி , வடக்கு தெற்காக மேற்கில் – 55அடி.1375 சதுர அடி அல்லது 3 சென்ட் 67 சதுர அடி பரப்பளவு உள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய திருமதி புஷ்பராணிக்கு சொந்தமான கட்டிடம் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

3. கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், தொண்டாமுத்தூர் துணைப் பதிவு மாவட்டம், பேரூர் வட்டம், [illegible] கிராமம், நத்தம், SF எண். 85–தற்போது SF எண். 961/17 (புதியது), மாரியம்மன் கோயில் தெருவில் உள்ள நிலம் பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது. வடக்கில்: SF எண்.961/19 இல் உள்ள நிலங்கள், கிழக்கில்: SF எண்.945 இல் உள்ள நிலங்கள், தெற்கில்: SF எண்.961/15 மற்றும் 961/16 இல் உள்ள நிலங்கள், மேற்கில்: SF எண்.961/16 மற்றும் 961/18 இல் நிலங்கள். அளவீடு : வடக்கில்: வடமேற்கு மூலையில் இருந்து கிழக்கு நோக்கி 18.2 மீ, பின்னர் தெற்கு நோக்கி 1.6 மீ, பின்னர் கிழக்கு நோக்கி 17.6 மீ, கிழக்கில்: வடக்கு தெற்காக 6.8 மீ, தெற்கில்: தென்மேற்கு மூலையில் இருந்து கிழக்கு நோக்கி 15.8 மீ. பின்னர் தெற்கு நோக்கி 0.6 மீட்டர்கள் , பின்னர் கிழக்கு நோக்கி 18.4 மீட்டர்கள், மேற்கு வடக்கு தெற்கில் 7.2 மீட்டர் பரப்பளவில் 208 சதுரமீட்டர் அல்லது 2239 சதுர அடிகள் மற்றும் அனைத்து வசதிகளுடன் கூடிய திருமதி[illegible] சொந்தமான நிலம் மற்றும் கட்டிடம் [illegible] பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது.

4. கோயம்புத்தூர் பதிவு மாவட்டம் , வடவள்ளி துணை பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வட்டம், வடவள்ளி கிராமம், SF எண். 2/2 இல் 2.49 ஏக்கர் மற்றும் SF எண் 1/1 இல் உள்ள 3.87 ஏக்கர் நிலத்தில் உள்ள 3.02 ஏக்கர் நிலம், நகரமைப்பு அதிகாரிகளால் முறையாக அங்கீகரிக்கப்பட்டு LPDM/DPCN எண்:156/1979 இல் "திருமுருகன் நகர்" என திருத்தப்பட்ட திட்டத்தின்படி LPDMTC (CPN) எண்:54/79ன் படி வீட்டு மனைகளாக அமைக்கப்பட்டது. இதில் உள்ள மனை எண்.10 பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது. வடக்கில்: மனை எண்.17, தெற்கில்: 15அடி மேற்கு ரோடு, மேற்கில்: மனை எண்.11, கிழக்கில்: மனை எண்.9. இதன் அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கில்: 40 ½அடி, கிழக்கு மேற்காக தெற்கில் –40 அடி, வடக்கு தெற்காக கிழக்கில் –72 ½ அடி, வடக்கு தெற்காக மேற்கில் – 78 ½ அடி. 3020 ச.அடி அல்லது 6 சென்ட்கள் 406 ச.அடி உள்ள நிலமும் அதனுடன் கூடிய கட்டிடமும், பாதை வழி உரிமைகளும், எல்லைகளும் உள்ள SF எண்.1/1C இல் அமைந்துள்ள திரு. P [illegible] சொந்தமான இந்த சொத்து வடவள்ளி பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது.

5. கோயம்புத்தூர் பதிவு மாவட்டம் வடவள்ளி துணைப் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வட்டம், வடவள்ளி கிராமம் SF எண்.523/2C–[illegible] பின்வரும் எல்லைகளுக்குள் உள்ள நிலம். வடக்கில்: கிழக்கு மேற்கு சாலை, தெற்கில்: திரு.[illegible] சொந்தமான நிலம், கிழக்கில்: வடக்கு தெற்கு சாலை, மேற்கில்: திரு.[illegible] சொந்தமான சொத்து. அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கில்: 25அடி, கிழக்கு மேற்காக தெற்கில் –25 அடி, வடக்கு தெற்காக கிழக்கில் –39 அடி , வடக்கு தெற்காக மேற்கில் – 39 அடி. திருமதி. புஷ்பராணிக்கு சொந்தமான 975 சதுர அடி அல்லது 02 சென்ட் 104 சதுர அடி நிலம் மற்றும் பிற அனைத்து பொது உரிமைகளுடன் கூடிய சொத்து, கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

6. கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், தொண்டாமுத்தூர் துணைப் பதிவு மாவட்டம் பேரூர் வட்டம், எண்.8 பேட்டை கிராமம், மாரியம்மன் கோவில் தெரு, பழைய SF எண். 374/1A பகுதி, புதிய SF எண்.606/3, பின்வரும் எல்லைகளில் அமைந்துள்ளது. எல்லைகள்: கிழக்கு: SF எண்.606/2 இல் உள்ள நிலங்கள், மேற்கில்: SF எண்.606/4 இல் உள்ள நிலங்கள், வடக்கில்: SF எண்.607 இல் உள்ள நிலங்கள், தெற்கில்: SF எண்.373 இல் உள்ள நிலங்கள். அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கில்: 13.8 மீட்டர்கள், கிழக்கு மேற்காக தெற்கில் –15.4மீட்டர்கள், வடக்கு தெற்காக மேற்கில் –8 மீட்டர்கள், வடக்கு தெற்காக கிழக்கில் – 11.6 மீட்டர்கள். 1615 சதுர.அடி அல்லது 03சென்ட் 308 ச.அடி நிலம் மற்றும் அதன்மீது அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டிடம் உள்ள திரு. P [illegible] சொந்தமான கதவு எண். 63/130F மற்றும் புதிய கதவு எண் 8/2–131 இல் உள்ள, இந்த சொத்து பேட்டை பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது.

7.கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வட்டம், வடவள்ளி கிராமம், S.F.எண்.2/1 இல் உள்ள 1.73 ஏக்கர்கள் ,S.F.எண். 1/1A பகுதி இல் உள்ள 3.02 ஏக்கர்கள் என உள்ள நிலத்தின் எல்லைகள்: தெற்கில்: கிழக்கு மேற்காக மருதமலையிலிருந்து கோயம்புத்தூருக்கு செல்லும் சாலை, கிழக்கில்: S.F.எண். 1/1A பகுதியில் உள்ள நிலங்கள், மேற்கில்: [illegible] கிராமம், வடக்கில்: [illegible] மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான நிலம் , மொத்தம் உள்ள 3.87 ஏக்கர் நிலமானது LPDM/DDTP (CNR) எண், 156/79, திருத்தியமைக்கப்பட்ட திட்டம் LPDM/DDTP (CNR) எண். 54/79 இன்படி அதிகாரப்பூர்வ அதிகாரிகளால் உரிய வகையில் வீட்டு மனைகளாக மாற்ற ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் மனை எண்.1 எல்லைகள்: வடக்கு: மனை எண்.2, தெற்கு: 15 அடி கிழக்கு மேற்கு லே அவுட் சாலை, கிழக்கு: S.F.எண். 1/1A பகுதியில் உள்ள நிலங்கள், மேற்கு: 30 அடி வடக்கு தெற்கு சாலை, அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கில்: 53'6", கிழக்கு மேற்காக தெற்கில்: 60", வடக்கு தெற்காக கிழக்கில்: 52'6", வடக்கு தெற்காக மேற்கில்: 67'6", வடகிழக்கு மூலையில் 10 அடி என 3786 ச.அடி அல்லது 8 சென்ட்கள் 301 ச.அடி. இதில் 1893 ச.அடி நிலமாக எஞ்சியுள்ள கிழக்கு பக்கத்தில் 1893 ச.அடி உள்ளது. எல்லைகள்: வடக்கு: மனை எண்.1 இன் எஞ்சிய நிலம், தெற்கு: கிழக்கு மேற்காக மருதமலை பிரதான சாலை, கிழக்கு: [illegible] கட்டடம், மேற்கு: வடக்கு தெற்காக 30 அடி லே அவுட் சாலை, அளவீடு: கிழக்காக மேற்கில் வடக்கில்: 24'6", கிழக்கு மேற்காக தெற்கில்: 31", வடக்கு தெற்காக கிழக்கில்: 15'3", வடக்கு தெற்காக மேற்கில்: 26", வடகிழக்கு மூலையில் 10" என 723 ச.அடி நிலமானது இரண்டு கடைகள் 8×16 மற்றும் நான்கு கடைகள் 10×16 அளவிலும் நடைபாதை, லே அவுட் சாலை என அனைத்து பயன்பாட்டு உரிமைகளுடன் வடவள்ளி பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது. இந்த சொத்தானது S.F.எண். 1/1A இன்படி உரிமையாளர் திருமதி.தமிழ்செல்விக்கு சொந்தமாக திருமுருகன் நகரில் அமைந்துள்ளது.

8.கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி துணைப் பதிவு மாவட்டம் , கோயம்புத்தூர் வட்டம், வடவள்ளி கிராமம், SF எண். 715 இல் உள்ள 3.19 ஏக்கர்கள் உள்ள நிலம் MV/NUE No.46/2006 இன்படி வீட்டுமனைகளாக அமைக்கப்பட்டுள்ள சொத்தில் மனை எண்.67, பின்வரும் எல்லைகளில் அமைந்துள்ளது. எல்லைகள்: வடக்கில்: மனை எண்.62, தெற்கில்: 30 அடி கிழக்கு மேற்கு சாலை, கிழக்கு: மனை எண்.66, மேற்கில்: SF எண்.717 இல் உள்ள நிலங்கள், அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கில்: 30 அடி, கிழக்கு மேற்காக தெற்கில் –30 அடி, வடக்கு தெற்காக கிழக்கில் –50 அடி, வடக்கு தெற்காக மேற்கில் – 50 அடி. 1500 சதுர.அடி அல்லது 03சென்ட் 193 ச.அடி நிலம் மற்றும் அதன்மீது அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டிடம் உள்ள SF எண்.715/5 இல் உள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

தேதி: 05.02.2024
இடம்: கோயம்புத்தூர்

ஒப்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

ஆய்வு கூட்ட ஆலோசனை

▶ தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டு குழு தலைவர் அன்பழகன் தலைமையில் குழு உறுப்பினர்கள் இன்று திருப்பூர் மாவட்டத்தில் கள ஆய்வு மற்றும் ஆய்வு கூட்டம் மேற்கொள்ள உள்ளனர். இது தொடர்பாக மதிப்பீட்டு குழு தலைவர் அன்பழகன், கலெக்டர் கிறிஸ்துராஜூடன் பப்பீஸ் விஸ்டா ஓட்டலில் ஆலோசனையில் ஈடுபட்டார். அருகில், மாநகர போலீஸ் கமிஷனர் பிரவீன்குமார் அபிநபு மற்றும் பலர் உள்ளனர்.

உடுமலையில் இன்று மின்தடை

உடுமலை, பிப். 8: உடுமலை மற்றும் இந்திராநகர் துணை மின்நிலையங்களில் பராமரிப்பு பணி காரணமாக, இன்று (8-ம்தேதி) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கீழ்க்கண்ட இடங்களில் மின் விநியோகம் இருக்காது என அறிவிக்கப்பட்டுள்ளது. மின்தடை ஏற்படும் இடங்கள்: உடுமலை நகரம், பழனி சாலை, தங்கம்மாள் ஓடை, ராகல்பாவி, சுண்டக்காம்பாளையம், ஆர். வேலூர், கணபதிபாளையம், வெனசுபட்டி, தொட்டம்பட்டி, புக்குளம், குறுஞ்சேரி, பொன்னேரி, சின்னவீரம்பட்டி, கோட்டமங்கலம், சங்கர்நகர், காந்திநகர் 2, சிந்துநகர், ஸ்ரீராம்நகர், ஜீவாநகர், அரசு கலைக்கல்லூரி பகுதி, போடிப்பட்டி, பள்ளபாளையம், கொங்கலகுறிச்சி, குறிச்சிக்கோட்டை.

மாநில இறகுப்பந்து போட்டி

பிரண்ட்லைன் பள்ளி மாணவர்கள் அபாரம்

▶ மாநில அளவிலான இறகுப்பந்து போட்டியில் தங்கம் வென்று பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவர்களை, பள்ளியின் தாளாளர் சிவசாமி பாராட்டினார்.

திருப்பூர், பிப்.8: மாநில அளவிலான இறகுப்பந்து போட்டியில் திருப்பூர் பிரண்ட்லைன் பள்ளி மாணவர்கள் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

மாநில அளவிலான 3வது குடியரசு தின விளையாட்டு போட்டிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் சமீபத்தில் நடைபெற்றது. இதில், 38 மாவட்டங்களில் இருந்து ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில், திருப்பூர் பிரண்ட்லைன் பள்ளி மாணவர்கள் கவியுகன் மற்றும் கவின்குமார் ஆகியோர் (14 வயதுக்கு உட்பட்டோர் பிரிவு) மாநில அளவிலான இறகுப்பந்து இரட்டையர் போட்டியில் கலந்து கொண்டு முதலிடம் பிடித்து தங்கம் வென்றனர். மாநில அளவில் முதலிடம் பிடித்து பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவர்களையும், உற்கல்வி ஆசிரியர் செந்தில் ஆகியோரை பள்ளியின் தாளாளர் டாக்டர் சிவசாமி, பள்ளியின் செயலாளர் சிவகாமி, இயக்குனர் சக்திநந்தன், இணைச் செயலாளர் வைஷ்ணவி, பள்ளி முதல்வர் வசந்தராஜ் ஆகியோர் பாராட்டினர்.

பல்லடம் முதல் வெள்ளகோவில் வரை

தேசிய நெடுஞ்சாலை விரிவாக்க பணி தீவிரம்

பல்லடம், பிப்.8: பல்லடம் முதல் வெள்ளகோவில் வரை தேசிய நெடுஞ்சாலை விரிவாக்க பணி தீவிரமாக நடந்து வருகிறது. பல்லடம் நகரம் கோவை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. மேலும், கோவை திருச்சி தேசிய நெடுஞ்சாலையுடன், திருப்பூர், பொள்ளாச்சி, உடுமலை, அவினாசி, தாராபுரம் ஆகிய மாநில நெடுஞ்சாலைகள் இணைவதால் பல்லடத்தில் வாகன போக்குவரத்து பல மடங்கு அதிகரித்து வருகிறது. கோவை - திருச்சி தேசிய நெடுஞ்சாலை எண் 81ல் தினமும் 40 ஆயிரத்திற்கும் மேலான வாகனங்கள் செல்கின்றது. இதனால், பல்லடம் நகரத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, விபத்துக்கள், ஏற்பட்டு உயிரிழப்புகள் அதிகரித்து வந்தது.

இதனால், கோவை திருச்சி தேசிய நெடுஞ்சாலையை விரிவாக்கம் செய்ய வேண்டும், புறவழிச்சாலை மற்றும் பல்லடம் நான்கு சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்ட வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், முதற்கட்டமாக பல்லடம் அருகே உள்ள காரணம்பேட்டை முதல் பல்லடம் அண்ணா நகர் வரை உள்ள 12 கி.மீ துாரத்திற்கு நான்கு வழிச்சாலையாக விரிவாக்கம் செய்யப்பட்டது. தற்போது, பல்லடம் வெள்ளகோவில் வரை 47 கி.மீ. துாரம் உள்ள தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப்பணிகள் கடந்த சில வாரங்களுக்கு முன்பு தொடங்கி நடைபெற்று வருகிறது. ரூ.275 கோடி மதிப்பில் நடைபெறும் இந்தப் பணி அடுத்த ஆண்டுக்குள் நிறைவடையும். தற்போது 10 மீட்டராக உள்ள இந்த தேசிய நெடுஞ்சாலை 19.2 மீட்டராக விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. இந்நிலையில், வரும் 25ம் தேதி பிரதமர் மோடி பங்கேற்கும் பொதுக்கூட்டம் பல்லடம் அருகே உள்ள மாதப்பூர் பகுதியில் நடைபெற உள்ளது. இதனால், வாகன போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்பதால் தற்போது அந்தப் பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

காங்கயம் காவல் நிலையத்திற்கு

புதிய இன்ஸ்பெக்டர் பொறுப்பேற்பு

▶ சோமசுந்தரம்

காங்கயம், பிப்.8: காங்கயம் காவல் நிலையத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டராக காமராஜ் பணியாற்றி வந்தார். இந்நிலையில் காமராஜ் ஈரோடு வடக்கு காவல் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இதையடுத்து ஈரோடு தாலுக்கா காவல் நிலையத்தில் பணியாற்றி வந்த சோமசுந்தரம் மாறுதல் செய்யப்பட்டு காங்கயம் காவல் நிலையத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

புதியதாக பொறுப்பு ஏற்றுக்கொண்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் சோமசுந்தரத்தை காவல் நிலையத்தில் பணியாற்றி வரும் உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் தங்களது வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

தொழிற்பள்ளிகள் துவங்க விண்ணப்பிக்கலாம்

கலெக்டர் தகவல்

திருப்பூர், பிப். 8: திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் கோவை மண்டலத்திற்கு உட்பட்ட கோவை, ஈரோடு, திருப்பூர், நீலகிரி மற்றும் கரூர் மாவட்டங்களில் 2024–2025ம் கல்வி ஆண்டிற்கு இந்த துறையின் கீழ், புதிய தொழிற்பள்ளிகள் தொடங்குதல், அங்கீகாரம் புதுப்பித்தல், கூடுதல் தொழிற்பிரிவுகள் மற்றும் கூடுதல் அலகுகள் தொடங்குதல் தொடர்பாக விண்ணப்பிக்க விரும்புவோர் வரும் 29ம் தேதி வரை *www.skilltraining.tn.gov.in* இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம். இது தொடர்பாக மேலும் விவரங்களுக்கு சென்னை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரை 044-22501083, 044- 22500099, 044- 22500199 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

குடிநீர் குழாய் உடைப்பை சரி செய்ய கோரிக்கை



▶ காங்கயம் சென்னிமலை நெடுஞ்சாலையில் சாலை விரிவாக்க பணியின்போது காவிரி நீர் செல்லும் குழாய் உடைக்கப்பட்டுள்ளது.

காங்கயம், பிப்.8: காங்கயம் சென்னிமலை சாலை விரிவாக்க பணிக்கள் நடைபெறும் போது குடிநீர் குழாய் உடைக்கப்பட்டதால் 14 ஊராட்சிகளுக்கு குடிநீர் செல்வது தடைபட்டுள்ளதை சரிசெய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். காங்கயம் சென்னிமலை சாலை விரிவாக்கப்பணி நடைபெறுகிறது. இதில், ஆலாம்பாடி முதல் திட்டுப்பாறை வரை 16.2 மீட்டர் அகலமுள்ள சாலையாக மாற்றப்பட்டு வருகிறது. இதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இப்பகுதியில் சென்ற 8 இன்ச் காவிரி குடிநீர் செல்லும் குழாயை பல இடங்களில் உடைத்து விட்டனர். இதனால், காவிரி ஆறு தண்ணீர் காங்கயம் வழியாக சென்னிமலை ஒன்றியத்துக்குட்பட்ட எக்கட்டாம்பாளையம், பசுவபட்டி, முருங்கத்தொழுவு, குப்பிச்சிபாளையம், எல்லைகிராமம், புதுப்பாளையம், புஞ்சை பாலதொழுவு ஆகிய பஞ்சாயத்தில் உள்ள கிராம பகுதி மக்களுக்கு குடிநீர் சப்ளை தடைபட்டுள்ளது.

மேலும், காங்கயம் ஒன்றியத்துக்குட்பட்ட ஆலாம்பாடி, கீரனூர், மரவபாளையம், தம்மரெட்டிபாளையம் உள்பட 14 ஊராட்சி பகுதிக்கு தினமும் சுமார் 20 லட்சம் லிட்டர் தண்ணீர் செல்வது தடைபட்டுள்ளது. இதனால், 200க்கும் மேற்பட்ட கிராம மக்களுக்கு போதிய நீர் கிடைப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் குடிநீர் கொண்டு செல்லும் குழாய்கள் மேலேயே அமைக்கப்பட்டதால் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதாக கூறப்படுகிறது.

குடிநீர் குழாயை தற்காலிகமாக மாற்றி அமைத்த பணியை ஆரம்பித்திருக்க வேண்டும். காவிரி ஆற்றில் இருந்து தண்ணீர் வந்தும் அதை பயன்படுத்த முடியாத நிலையில் பொதுமக்கள் உள்ளனர். குடிநீர் குழாய் பராமரிப்பு செய்யும் தனியார் நிறுவனத்தினர் கடந்த 14 நாட்களாக கண்டுகொள்ளாமல் உள்ளனர். குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளும் கண்டுகொள்ளாமல் உள்ளனர். இதனால், அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் செயல்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது மாவட்ட நிர்வாகம் இது குறித்து உரிய நடவடிக்கை மெற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கே.1619 சேவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்

சேவூர் (அஞ்சல்), அவினாசி (தாலுக்கா), திருப்பூர் மாவட்டம்- 64165

மகாசபை கூட்ட அறிவிப்பு

அன்புடையீர்,

திருப்பூர் சரகத்தில் செயல்பட்டு வரும் கே.1619 சேவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கத்தின் உறுப்பினர் மகாசபை கூட்டம் கீழ்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவு எடுக்க வேண்டி 16.02.2024 (வெள்ளிக்கிழமை) மாலை 3.00 மணிக்கு சங்க அலுவலக கட்டிட வளாகத்தில் நடைபெறும். அதுசமயம் சங்கத்தின் "அ வகுப்பு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பொருட்கள் :

1. 2021-2022 தணிக்கை அறிக்கைகளை அங்கீகரித்தல்.
2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் குறிப்பாணை மே.கு.47420/2022 தொ.வே.ச.1 நாள் : 19.01.2024 வழி தொடர்புறுத்தப்பட்ட அரசாணை நிலை எண்.1 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சி.என்.1) துறை நாள் : 02.01.2024-ல் அறிவுறுத்தப்பட்டுளளவாறு மாதிரி துணைவிதித்திருத்தம் மேற்கொளுதல்.
3. பண்ணைசார்ந்த மற்றும் விவசாய முதலீட்டு கடன்களை நகை அடமானத்தின் பேரிலும் 36 மாத தவணைகளில் ரூ.5,00,000/- (ஐந்து இலட்சம்) வரை வழங்க துணைவிதித்திருத்தம் மேற்கொள்ளுதல் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் ஏற்படுத்துதல்.
4. பதிவாளர் சுற்றறிக்கை ந.க.எண். 67387/2023/ம.வ.கொ.1 நாள் : 09.01.2024-ன் படி பல்வேறு வகைக்கடன்கள் வழங்க கடன்களின் உச்ச வரம்பினை உயர்த்தி உள்ளதை அங்கீகரித்தல்.
5. சங்கத்தில் பழுதடைந்த தளவாட சாமான்களை ஏலம் விடுதல் மற்றும் அதனால் நஷ்டம் ஏற்படின் அத்தொகையை நட்ட கணக்கில் தாக்கல் செய்யும் விஷயம்.
6. புதிய "அ" வகுப்பு உறுப்பினர்கள் சேர்க்கை விண்ணப்பங்களை பரிசீலித்து அங்கீகரித்தல்.
7. இணை உறுப்பினராக சேர்ந்து பயிர்கடன் வழங்கிய உறுப்பினர்களை "அ வகுப்பு உறுப்பினர்களாக சேர்க்கவும் அவர்களுடைய பங்கு தொகையை அனாமத்து கணக்கில் உள்ளதை -அ" வகுப்பு பங்கு தொகைக்கு மாற்றும் விஷயம்.
8. தகுதியற்ற "அ" வகுப்பு உறுப்பினர்களை நீக்குதல்
9. சங்க வரவு செலவுகளை அங்கீகரித்தல்
10. சங்க செயலாட்சியரால் கொண்டு வரப்படும் இதர விசயங்கள்.

K.ஈஸ்வரமூர்த்தி
செயலாளர்

திருமதி.சு.பிரபா
கூட்டுறவு சார்பதிவாளர் / செயலாட்சியர்

இடம் : சேவூர்
நாள் : 07.02.2024

SOUTH INDIAN Bank

Experience Next Generation Banking

பிராந்திய அலுவலகம்: கோயம்புத்தூர். PB No. 3868, 1084/1-5, திருச்சி ரோடு, சுங்கம், கோயம்புத்தூர்-18, தமிழ்நாடு. இமெயில்: ro1002@sib.co.in, Tel: 0422 2303618, Website: southindianbank.com, CIN: L65191KL1929PLC001017

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref: CBE/RO/REC/MSME&CORP/130/23-24

தேதி: 06.02.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ். பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்கள்: 1) M/s. திருமலா எக்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட். அதன் பங்குதாரர்களால் பிரதிநிதித்துவம் பெற்றது. எண்.19-A, சத்திரம் தெரு, உடுமலைப்பேட்டை, திருப்பூர், தமிழ்நாடு-642126.

2) திருமதி. K.மாணிக்கம். M/s. திருமலா எக்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட் பங்குதாரர், 124A, அங்காளபரமேஸ்வரி இல்லம், வெஞ்சமடை, வெங்கடேசா மில்ஸ் P.O., உடுமலைப்பேட்டை, திருப்பூர், தமிழ்நாடு-642126.

3) திரு. S.கருணாகரன். M/s. திருமலா எக்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட் பங்குதாரர், 124A, அங்காளபரமேஸ்வரி இல்லம், வெஞ்சமடை, வெங்கடேசா மில்ஸ் P.O., உடுமலைப்பேட்டை, திருப்பூர், தமிழ்நாடு-642128.

4) திருமதி. K.ராணி. M/s. திருமலா எக்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட் பங்குதாரர், 124B, ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி இல்லம், வெஞ்சமடை, வெங்கடேசா மில்ஸ் P.O., உடுமலைப்பேட்டை, திருப்பூர், தமிழ்நாடு-642126.

தி சௌத் இந்தியன் வங்கி கோயம்புத்தூர் உடுமலைப்பேட்டை கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெடின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொள்நிலை சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 05.02.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், கோயம்புத்தூர் அவினாசி ரோடு கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.95,45,796.44 (ரூபாய் தொண்ணூற்றி ஐந்து லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து எழுநூற்றி தொண்ணூற்றி ஆறு மற்றும் பைசா நாற்பத்து நான்கு மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 27.02.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தாரர் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்: **திருமதி. K.மாணிக்கம் (லாட் எண்.1** மற்றும் **லாட் எண்.2** க்காக)

அசையாச் சொத்து விபரம்:- லாட் எண்.1: திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தாலுகா, பெரியகோட்டை கிராமம், S.F.No.173/ 1 (புதிய உட்பிரிவு பட்டா எண்.595, S.F.No.173/1A)-ன் கீழ் வரும் "அரவிந்தர் லே-அவுட்"டில் அமைந்துள்ள மனை எண்.7-க்குரிய 1200 சதுரடி அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன். அதிலுள்ள பிற அனைத்து கட்டுமானங்கள், மேம்பாடுகள், நடைபாதை மற்றும் வண்டிப்பாதை உரிமைகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள், இணை கட்டுமானங்களுடன் சேர்த்து திருமதி K.மாணிக்கம் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, உடுமலைப்பேட்டை சார்பதிவகத்தில் 05.03.2012 தேதியிட்ட கிரையப் பத்திர எண்.1575/2012-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: நேரு நகர் லே-அவுட் மனை, கிழக்கே: மனை எண்.8, தெற்கே: மனை எண்.7-ல் மீதமுள்ள நிலம் மற்றும் 8 அடி அகல வடக்கு-தெற்கு மண் நடைபாதை, மேற்கே: மனை எண்.6.

லாட் எண்.2: திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தாலுகா, பெரியகோட்டை கிராமம், S.F.Nos.17&18 (புதிய உட்பிரிவு பட்டா எண்.381 மற்றும் 380)-ன் கீழ் அமைந்துள்ள மனை எண்.14-க்குரிய 3880 சதுரடி அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற அனைத்து கட்டுமானங்கள், மேம்பாடுகள், நடைபாதை மற்றும் வண்டிப்பாதை உரிமைகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள், இணை கட்டுமானங்களுடன் சேர்த்து திருமதி. K. மாணிக்கம் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, உடுமலைப்பேட்டை சார்பதிவகத்தில் 23.05.2011 தேதியிட்ட கிரையப் பத்திர எண்.4436/2011-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: 30 அடி அகல கிழக்கு மேற்கு லே-அவுட் மண் ரோடு, கிழக்கே: மனை எண்.13, தெற்கே: காப்பகத்திற்கு சொந்தமான நிலம், மேற்கே: மனை எண்.15.

நிர்ணயிக்கப்பட்ட தொகை	**லாட் எண்.1: ரூ.12,42,000/-** (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து நாற்பத்திரண்டாயிரம் மட்டும்). **லாட் எண்.2: ரூ.34,78,000/-** (ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து எழுபத்தெட்டாயிரம் மட்டும்).
முன் வைப்புத் தொகை (EMD)	**லாட் எண்.1: ரூ.1,24,200/-** (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து நான்காயிரத்து இருநூறு மட்டும்). EMD 26.02.2024 அன்றோ அதற்கு முன்போ மாலை 5 மணி வரை வரவு வைக்கப்படும். **லாட் எண்.2: ரூ.3,47,800/-** (ரூபாய் மூன்று லட்சத்து நாற்பத்தேழாயிரத்து எண்ணூறு மட்டும்). EMD 26.02.2024 அன்றோ அதற்கு முன்போ மாலை 5 மணி வரை வரவு வைக்கப்படும்.
ஏல அதிகரிப்புத் தொகை	**லாட் எண்.1: ரூ.10,000/-** (ரூபாய் பத்தாயிரம் மட்டும்). **லாட் எண்.2: ரூ.50,000/-** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்).
இ-ஏல தேதி மற்றும் நேரம்	**லாட் எண்.1:** 27.02.2024 காலை 11:00 மணி முதல் பிற்பகல் 1:00 மணி வரை (விற்பனை முடியும் வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்) **லாட் எண்.1:** 27.02.2024 பிற்பகல் 1:00 மணி முதல் 3:00 மணி வரை (விற்பனை முடியும் வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்)
வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள்	**லாட் எண்.1:** ஏதுமில்லை **லாட் எண்.2:** ஏதுமில்லை

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட்.(Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.

சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட். தொலைபேசி எண். 9443759259 ல் தொடர்பு கொள்ளவும்.

இடம்: கோயம்புத்தூர்

அங்கீகாரம் பெற்ற அலுவலர்

க்ரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

(முன்னதாக, பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்)

பதிவு பெற்ற அலுவலகம்: 602, 6 ஆவது தளம், ஸீரோ ஒன் ஐடி பார்க், எஸ்.எண்.79/1, கோர்பாடி, முந்த்வா ரோடு, புனே–411036. கிளை அலு: எண்.1510, இரண்டாவது தளம், ஸ்ரீ காம்ப்ளக்ஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641018.

மின்–ஏலம்–விற்பனை அறிவிப்பு

(சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை)

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் [illegible] https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். [illegible]

வ. எண்.	முன்மொழிவு எண், வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத் தொகை (B)	சுவாதீனத் தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%) (F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலம் விடும் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண்: HF/0118/H/20/100223 சுகுமார் (கடன்தாரர்), பிரியதர்ஷினி P (உப–கடன்தாரர்)	அறிவிப்பு தேதி:10.07.2023 மொத்த நிலுவைத் தொகை: 10.07.2023 தேதியின் படி ரூ.15,86,496.89/– (ரூபாய் பதினைந்து லட்சத்து எண்பத்தாறாயிரத்து நானூற்று தொண்ணூற்று ஆறு மற்றும் பைசா எண்பத்தொன்பது மட்டும்) மற்றும் தொகை செலுத்தப்படும் காலம் வரையிலான ஆண்டு 13.25% வட்டியுடன் கூடிய வட்டி.	கையக	திருப்பூர் இணை I சார் பதிவு மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், மங்கலம் கிராமம், ஸ்ரீ காயத்ரி அவென்யூ, திருப்பூர் மாவட்டம், பின்கோடு: 641663, S.No.125/1, [illegible] இல் மனை எண்.15 இன் மேற்கு பகுதி, பட்டா எண்.283, 336 இன் படி, அடங்கியுள்ள அனைத்து துண்டுகளும் பகுதிகளும் அடங்கிய சொத்து.	ரூ.14,23,596/–(ரூபாய் பதினான்கு இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று ஆறு மட்டும்)	ரூ.1,42,359.60/– (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து முந்நூற்று ஐம்பத்தொன்பது மற்றும் பைசா அறுபது மட்டும்)	22.02.2024 மாலை 5.00 மணிக்குள்	ரூ.10,000/-	16.02.2024 (11 AM– 4 PM)	23.02.2024 (11 AM– 2 PM)	ஒன்றுமில்லை

[illegible]

நாள்: 08.02.2024, இடம்: திருப்பூர்

ஒப்/– அதிகாரப்பூர்வ அதிகாரி, க்ரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)